FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323721

1. District : மாவட்டம் தென்காசி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: 2026 ஆண்டு FIR No.: 10/2026 மு.த.அ. எண் Date: 28.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7, 8
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 27.08.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 10.00 hrs Time to : நேரம் வரை 15.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.2026 Time : நேரம் 11.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Block Development office, Kadayanallur. 15 Km North.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் க.ஒசானா பெர்னாண்டோ (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.ஆவுடையப்பன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 07.01.1976 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் (g) Address : முகவரி நகர நிலவரிதிட்ட அலகு-1 தென்காசி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A-1 திரு.வெங்கடேஷ்வரன், ஓவர்சியர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கடையநல்லூர், A-2 திரு.மு.முத்துக்குமார், அ-2 பிரிவு உதவியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கடையநல்லூர், A-3 திரு.ராமசாமி, ஓவர்சியர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கடையநல்லூர், A-4 திரு.V.A.மாரியப்பன், பஞ்சாயத்து செயலாளர், குலையநேரி பஞ்சாயத்து, A-5 திரு.S.மார்கோனி, உதவி பொறியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கடையநல்லூர், A-6 ஒப்பந்ததாரர் திரு.மருதப்பாண்டி, த/பெ திரு.தங்கப்பசாமி, ககவு எண். 104, நடுத்தெரு, கட்டாணங்குளம், சங்கரன்கோவில் தாலுகா (தனி நபர்),

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

No delay

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு .

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 28.08.2026-ம் தேதி காலை 11.30 மணிக்கு M.பால் சுதர், துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது தென்காசி நகர நிலவரிதிட்ட அலகு-1, தனி வட்டாட்சியர் திருமதி.க.ஒசானா பெர்னாண்டோ அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 27.08.2026-ம் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் க.ஒசானா பெர்னாண்டோ, க/பெ ஆவுடையப்பன், தனி வட்டாட்சியர், நகர நிலவரிதிட்ட அலகு-1, தென்காசி. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி மாவட்டம். அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை 27.08.2026-ம் தேதி மாலை திடீர் இணை ஆய்வு செய்தபோது செயலிகள் மூலம் ரூ.3,80,000/-க்கு சந்தேகத்திற்குரிய பண பரிமாற்றம் நடைபெற்றதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக. தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/8/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

28/8/2026

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.8.2026
HHS

Name: பெயர் M. PAULSMITHER.
Rank: நிலை .....No. எண் .....
DSP. VAC
Tenkasi.

ஒப்பந்ததாரர்களிடமும் மற்றும் வீடு கேட்டு விண்ணப்பத்தவர்களிடமும் பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி, தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர் அவர்களுடன் இணைந்து கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை 27.08.2026-ம் தேதி மாலை 15.00 மணியளவில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஓவர்சியர் திரு.வெங்கடேஷ்வரன் வைத்திருந்த செல்போனை ஆய்வு செய்தபோது, 9791839380 என்ற எண்ணிற்கான Phonepe செயலி மூலம் ஒப்பந்ததாரர் ஷெல்டன் முத்துவின் செல்போன் எண்.7010360701 லிருந்து 28.01.2025-ல் ரூ.30,000/-மும், 17.05.2025-ல் ரூ.10,000/-மும், 25.08.2025-ல் ரூ.70,000/-மும், 29.09.2025-ல் ரூ.10,000/-மும், 18.10.2025-ல் ரூ.5,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,25,000/- பெற்றுள்ளார். மேலும் ஒப்பந்ததாரர் திரு.அரவிந்திடம் இருந்து 14.07.2025ம் தேதியில் ரூ.25,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பண பரிவர்த்தனை குறித்து திரு.வெங்கடேஷ்வரனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக அறையில் இருந்த A-2 உதவியாளர் திரு.மு.முத்துக்குமார் வைத்திருந்த IQOO Z9s 5G செல்போனில் உள்ள 9524311528 என்ற எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது ஒப்பந்ததாரர் பாலாவின் செல்போன் எண்.9361149234 லிருந்து 20.05.2024-ல் ரூ.3,000/- பெற்றுள்ளார். மேற்படி பணவர்த்தனை குறித்து திரு.முத்துக்குமாரிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் கூறவில்லை. கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக அறையின் வாசல் அருகே நின்று கொண்டிருந்த ஒப்பந்ததாரர் திரு.மருதப்பாண்டி வைத்திருந்த செல்போனில் உள்ள 9629425206 என்ற எண்ணிற்கான G.Pay செயலியை ஆய்வு செய்தபோது 09.06.2026 தேதியில் சாம்சன் AD ஆபிஸ், தென்காசி என்பவரின் செல்போன் எண்.9789472518 க்கு ரூ.15,000/- அனுப்பியுள்ளார். சுந்தரேசபுரம் பஞ்சாயத்து துணை தலைவர் திரு.தங்கபாண்டியன் செல்போன் எண்ணிற்கு 24.10.2024-ல் ரூ.50,000/-மும், 20.07.2026-ல் ரூ.30,000/-மும், 27.07.2026-ல் ரூ.14,000/-மும், 07.08.2026-ல் ரூ.5,000/-மும், 13.08.2026-ல் ரூ.15,000/-மும், 15.08.2026-ல் ரூ.1,000/-மும், 19.08.2026-ல் ரூ.10,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,25,000/-அனுப்பியுள்ளார். அதேப்போல் சுந்தரேசபுரம் பஞ்சாயத்து தலைவரின் கணவர் திரு.ராஜேந்திரன் என்பவருக்கு 11.08.2026-ல் ரூ.40,000/-மும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஓவர்சியர் திரு.ராமசாமிக்கு ரூ.12,000/-மும் அனுப்பியுள்ளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திரு.மருதபாண்டியிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி அலுவலக அறையில் நின்று கொண்டிருந்த குலையநேரி பஞ்சாயத்து செயலாளர் திரு.மாரியப்பன் வைத்திருந்த செல்போனில் உள்ள 9442999165 என்ற எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது ஒப்பந்ததாரர்

அரவிந்த்திடமிருந்து 17.04.2026-ல் ரூ.2,000/-மும், ஒப்பந்ததாரர் தங்கத்திடமிருந்து 28.04.2026-ல் ரூ.2,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திரு.மாரியப்பனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் திரு.S.மார்கோனி வைத்திருந்த செல்போனில் உள்ள 7010571773 என்ற எண்ணிற்கான Phonepe செயலியை ஆய்வு செய்தபோது ஒப்பந்ததாரர் நிஜாமிடமிருந்து 17.02.2026-ல் ரூ.21,000/-மும், ஒப்பந்ததாரர் செல்லத்துரையிடமிருந்து 15.11.2025-ல் ரூ.10,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திரு.மார்கோனியிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. இந்த சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்ட ரூ.3,80,000/-க்கு செயலிகள் மூலம் சந்தேகத்திற்கிடமான முறையில் நடைபெற்ற பண பரிமாற்றமானது ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு அலுவலக ஊழியர்கள் மற்றும் பஞ்சாயத்து தலைவர்களுக்கு கொடுத்ததாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை 27.08.2026 மாலை 15.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 19.45.00 மணிக்கு முடிக்கப்பட்டது. கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சோதனையின்போது இருந்த ஓவர்சியர் திரு.வெங்கடேஷ்வரன், அ-2 பிரிவு உதவியாளர் திரு.மு.முத்துக்குமார், குலையநேரி பஞ்சாயத்து செயலாளர் திரு.மாரியப்பன், உதவி பொறியாளர் திரு.S.மார்கோனி, ஒப்பந்ததாரர் திரு.மருதப்பாண்டி மற்றும் ஓவர்சியர் திரு.ராமசாமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd.28.08.2026, (K.Osana Fernando), Spl.Tahsildar, Town Settlement, (Unit-1), Tenkasi. Sir, Received the complaint on 28.08.2026 at 11.30 hrs and registered a case in Tenkasi V&AC, Cr.No.10/2026 u/s 7, 8 of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 on 28.08.2026 at 14.00 hrs Sd., 28.08.2026, M.Paul Suther, DSP, V&AC, Tenkasi.

27.08.2026-ம் தேதி தென்காசி-மதுரை ரோட்டின் கீழ்புறம் கடையநல்லூர் விழுதுகள் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தின் அருகில் கதவு எண் 73/32-ல் அமைந்துள்ள கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் தென்காசி நகர நிலவரித்திட்ட (அலகு-1) தனி வட்டாட்சியர் திருமதி.க.ஒசானா பெர்னாண்டோ அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: 1) திருமதி.க.ஒசானா பெர்னாண்டோ, துணை ஆய்வுக்குழு அலுவலர், தென்காசி. தனி வட்டாட்சியர், நகர நிலவரித்திட்ட (அலகு-1) தென்காசி. 2) திரு.M.பால் சுதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி. இன்று 27.08.2026-ம் தேதி பிற்பகல் 13.00 மணிக்கு கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய

அலுவலக ஊழியர்கள் ஒப்பந்ததாரர்களிடமும் மற்றும் வீடு கேட்டு விண்ணப்பத்தவர்களிடமும் பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் தென்காசி நகர நிலவரித்திட்டம் (அலகு-1) தனி வட்டாட்சியர் திருமதி.க.ஒசானா பெர்னாண்டோ அவர்கள் தலைமையில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர் மற்றும் காவலர்கள் சகிதம் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 14.30 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0995-ல் புறப்பட்டு இடைகால் வழியாக வந்து சுமார் 15.00 மணிக்கு கடையநல்லூர் ஒருங்கிணைந்த சேவை மையத்திற்கு வடக்கு பக்கத்தில் தென்காசி – மதுரை மெயின்ரோட்டிற்கு கீழ்புறம் மேற்கு நோக்கி அமைந்துள்ள கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவகத்தின் மெயின் கேட் வழியாக உள்ளே வந்து போர்டிகோவில் வந்ததும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் வரண்டாவை ஒட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார வளர்ச்சி) அறை உள்ளது. மேற்படி அறை பூட்டியிருந்தது. மேற்படி அறைக்கு தென்புறம் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறை உள்ளது. அதில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.ராஜசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) என்பவர் இருந்தார். அவரிடம் தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் உள்ள தென்காசி நகர நிலவரித்திட்ட அலகு-1 தனி வட்டாட்சியர் திருமதி.க.ஒசனா பெர்னாண்டோ தன்னையும், தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டார். அதன்பின்னர் அந்த அறை சோதனை செய்யப்பட்டது.

கடையநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ராஜசேகரிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய சட்டைப் பாக்கெட்டில் இருந்து ரூ.1,700/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அந்த பதிவேடு சரியாக பராமரிக்கப்படாமல் இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.ராஜசேகரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் ரூ.1,700/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அறையின் தென்பக்கம் கணினி அறை உள்ளது. மேற்படி கணினி அறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சு.சங்கேரஸ்வரன், ஒவர்சியர் திரு.வெங்கடேஷ்வரன், திரு.தீபக், கணினி ஆபரேட்டர்கள் திருமதி.தங்க துரைச்சி, திருமதி.கலைச்செல்வி, திருமதி.காமேஸ்வரி, திரு.பொன்ராஜ், செல்வி.அருள்ஸ்ரீ, திருமதி.மரகதம், செல்வி.வனிதா, திருமதி.ஷோபனா மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்

செல்வி.காயத்ரி ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி அறையில் இருந்த ஓவர்சியர் திரு.வெங்கடேஷ்வரன் வைத்திருந்த விவோ V30 மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9791839380 என்ற சிம் இருந்தது. மேற்படி எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது ஒப்பந்ததாரர் ஷெல்டன் முத்து என்பவரின் செல்போன் எண்.7010360701 லிருந்து 28.01.2025-ல் ரூ.30,000/-மும், 17.05.2025-ல் ரூ.10,000/-மும், 25.08.2025-ல் ரூ.70,000/-மும், 29.09.2025-ல் ரூ.10,000/-மும், 18.10.2025-ல் ரூ.5,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,25,000/- பெற்றுள்ளார். மேலும் ஒப்பந்ததாரர் திரு.அரவிந்திடம் இருந்து 14.07.2025ம் தேதியில் ரூ.25,000/- மும் பெற்றுள்ளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திரு.மருதுபாண்டியிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை.

மேற்படி கணினி அறையின் தென்பக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள் அறை உள்ளது. மேற்படி அறையில் தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) திரு.முருகன், திருமதி.செண்பக செல்வி, திருமதி.செண்பகம், திருமதி.ராஜேஷ்வரி, திருமதி.ராசாத்தி, தட்டச்சர் திருமதி.ராமலட்சுமி, திருமதி.வசந்தி, உதவியாளர் திருமதி.சண்முக ராஜேஷ்வரி, திருமதி.அங்கம்மாள், திருமதி.வள்ளிமயில், திருமதி.மாரியம்மாள், திரு.முத்துக்குமார், திரு.சாகுல் ஹமீது, திரு.இசக்கியப்பன், இளநிலை உதவியாளர் திருமதி.முத்துலெட்சுமி, திருமதி.அர்ச்சனா தேவி, பதிவறை எழுத்தர் திருமதி.வெங்கடேஷ்வரி, காசாளர் திரு.லெட்சுமணன், கணக்காளர் திருமதி.பானுமதி மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.பட்டத்தி ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி அறையில் இருந்த உதவியாளர் திரு.முத்துக்குமார் என்பவர் வைத்திருந்த IQOO Z9s 5G மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 8248868704, 9524311528 என்ற இரண்டு சிம் கார்டுகள் இருந்தது. மேற்படி 9524311528 என்ற எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது பாலா என்ற ஒப்பந்ததாரரின் செல்போன் எண்.9361149234 லிருந்து 20.05.2024-ல் ரூ.3,000/- பெற்றுள்ளார். மேற்படி பணவர்த்தனை குறித்து அவரிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் கூறவில்லை.

மேற்படி அலுவலக அறையின் அ4 இருக்கைக்கு அருகே வெளியே செல்லும் வாசல் அருகே நின்றுகொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட சங்கரன்கோவில் தாலுகா, தட்டாண்குளம் நடுத்தெரு, கதவு எண் 104ல் குடியிருந்து வரும் திரு.கருப்பசாமி மகன் திரு.மருதப்பாண்டி என்பவரை விசாரித்தபோது அவர் தான் ஒப்பந்ததாரராக இருப்பதாகவும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட போகனூர் பஞ்சாயத்தில் ஒப்பந்த வேலைகள் எடுத்து செய்து வருவதாகவும்,

போகநல்லூரில் நடக்கும் வேலை தொடர்பாக BDO-வை பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த விவோ Y21T மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9629425206 என்ற சிம் இருந்தது. மேற்படி எண்ணிற்கான சிட்டி யூனியன் பேங்க் செயலியை பார்த்தபோது 09.06.2026 தேதியில் சாம்சன் AD ஆபிஸ், தென்காசி என்ற பெயர் பதிவு கொண்ட 9789472518 என்ற செல்போன் எண்ணிற்கு ரூ.15,000/- அனுப்பியுள்ளார். மேலும் சுந்தரேசபுரம் பஞ்சாயத்து துணை தலைவர் திரு.தங்கபாண்டியன் செல்போன் எண்ணிற்கு 24.10.2024-ல் ரூ.50,000/-மும், 20.07.2026-ல் ரூ.30,000/-மும், 27.07.2026-ல் ரூ.14,000/-மும், 07.08.2026-ல் ரூ.5,000/-மும், 13.08.2026-ல் ரூ.15,000/-மும், 15.08.2026-ல் ரூ.1,000/-மும், 19.08.2026-ல் ரூ.10,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,25,000/-அனுப்பியுள்ளார். சுந்தரேசபுரம் பஞ்சாயத்து தலைவரின் கணவர் திரு.ராஜேந்திரன் என்பவருக்கு 11.08.2026-ல் ரூ.40,000/-மும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஓவர்சியர் திரு.ராமசாமிக்கு ரூ.12,000/-மும் அனுப்பியுள்ளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திரு.மருதுபாண்டியிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி அலுவலக அறையில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட குலையநேரி பஞ்சாயத்து செயலாளர் திரு.மாரியப்பன் என்பரை சோதனை செய்தபோது அவரிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. அவர் வைத்திருந்த விவோ V1807 மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9442999165 என்ற சிம் இருந்தது. மேற்படி எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது ஒப்பந்ததாரர் அரவிந்த்திடமிருந்து 17.04.2026-ல் ரூ.2,000/-மும், ஒப்பந்ததாரர் தங்கத்திடமிருந்து 28.04.2026-ல் ரூ.2,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திரு.மாரியப்பனிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. ஊராட்சி ஒன்றிய அலுவலக அறையின் கீழ்பக்கத்தில் உள்ள VP-Gram-G அறையில் ஆவணங்கள் காணப்பட்டது. மேற்படி அறையை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை.

மேற்படி அறையின் A4 மனுக்கள் பிரிவின் இருக்கைக்கு அருகில் உள்ள வாசல் வழியாக அலுவலக அறைக்கு பின்புறம் வடகிழக்கில் உள்ள பொறியியல் பிரிவின் வராண்டாவில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட உதவி பொறியாளர் திரு.S.மார்கோனி நின்று கொண்டிருந்தார். அவரிடம் சோதனை குழுவினர் தங்களை அறிமுகம் செய்து கொண்டு அவரை பொறியில் பிரிவிற்கு அழைத்து சென்று சோதனை செய்தபோது அவரிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. அவர் வைத்திருந்த சாம்சங் கேலக்சி A54 5G மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 7010571773 என்ற சிம் இருந்தது. மேற்படி எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது ஒப்பந்ததாரர் நிஜாமிடமிருந்து 17.02.2026-ல் ரூ.21,000/-மும், ஒப்பந்ததாரர்

செல்லத்துரையிடமிருந்து 15.11.2025-ல் ரூ.10,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திரு.மார்கோனியிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேலும் மேற்படி பொறியியல் பிரிவில் இருந்த தொழில் நுட்ப உதவியாளர் திரு.சீதாராம் மற்றும் ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உதவியாளர் திரு.மல்லீஸ்வரன் ஆகியோர் இருந்தனர். அவர்களை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டாத பணம் ஏதும் இல்லை.

பொறியியல் பிரிவிற்கு மேற்புறம் வட்டார வளர்ச்சி அலுவலர் அறையின் அறைக்கு வடபுறம் கூட்ட அரங்கு உள்ளது. மேற்படி கூட்ட அரங்கில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருநெல்வேலி உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குனர் அலுவலக உதவி ஆய்வாளர் திரு.முருகன் தணிக்கை செய்து கொண்டிருந்தார். அவரை சோதனை செய்தபோது அவரிடம் கணக்கில் காட்டப்படாத பணம் இல்லை. இந்த சோதனையின்பொது கண்டுபிடிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு அலுவலக ஊழியர்கள் மற்றும் பஞ்சாயத்து தலைவர்களுக்கு மொத்த பணம் ரூ.3,80,000/- த்தை செயலி மூலம் அனுப்பியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (27.08.2026) மாலை 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 19.45 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம்.க.ஒசானா பெர்னாண்டோ, தனி வட்டாட்சியர், தென்காசி நகர நிலவரிதிட்ட அலகு-1, தனி வட்டாட்சியர். ஒம்.மற்றும் சிலர்.

The original complaint, Proceedings dated 27.08.2026 of Special Tahsildar, Town Settlement, (Unit-1), Tenkasi and original FIR were sent to the Hon'ble Principal District Sessions Judge, Tenkasi and copies sent to concerned higher officials.

28/8/2026

M. KAULSUTHER.
DSP. Vacant
Tenkasi.